Eastern University, Sri Lanka

Faculty of Commerce and Management

External Degree Programme

First Examination in Business Administration / Commerce

2002/2003 (June/July 2009) (External) - Repeat

BBA/COM 102 Financial Accounting

LIBRARY
04 DEC 2009
Eastern University, Sri Lanka.

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக

நேரம்: 3 மணித்தியாலங்கள்

கணித்தற் பொறி அனுமதிக்கப்பட்டுள்ளது.

---

01. திரு.அமலன் என்னும் தனிவியாபாரியின் கணக்கேடுகளிலிருந்து 31.12.2008 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி பின்வருமாறு :

| விடயங்கள் | வரவு ரூபா. | செலவு ரூபா. |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் (கிரயத்தில்) : காணி கட்டடம் | 900000 | |
| தளபாடம் பொருத்திகள் | 225000 | |
| மோட்டார் வாகனம் | 675000 | |
| 01.01.2008 இல் பெறுமானத்தேய்வு ஏற்பாடு: | | |
| காணி கட்டடம் | | 90000 |
| தளபாடம் பொருத்திகள் | | 45000 |
| மோட்டார் வாகனம் | | 225000 |
| மூலதனம் | | 1050000 |
| எடுப்பனவுகள் | 108000 | |
| 12% வங்கிக்கடன் | | 225000 |
| வங்கிக்கடன் வட்டி | 16900 | |
| வாடகை வரி, காப்புறுதி | 47250 | |
| மின்சாரம் | 56000 | |
| மின்சாரம் சென்மதி 01.01.2008 இல் | | 6000 |
| காகிதாதிகள் | 8100 | |
| விற்பனையாளர் சம்பளம் | 99000 | |
| அலுவலக சம்பளம் | 54000 | |
| விளம்பரம் | 112500 | |
| அறவிடமுடியாக் கடன் | 9000 | |
| பெற்ற கழிவு | | 15000 |
| கொடுத்த கழிவு | 20250 | |
| வெளிச்சென்ற வண்டிக்கூலி | 83250 | |
| உள்வந்த வண்டிக்கூலி | 47250 | |
| கொள்வனவுத் திரும்பல் | | 67500 |
| விற்பனைத் திரும்பல் | 90000 | |
| கொள்வனவுகள் | 1425000 | |
| விற்பனைகள் | | 2647500 |
| காசும் வங்கியும் | 99000 | |
| 01.01.2008 இல் ஐயக்கடனுக்கான ஏற்பாடு | | 9000 |
| கடன்கொடுத்தோர் | | 120000 |
| கடன்பட்டோர் | 135000 | |
| 01.01.2008 இல் இருப்பு | 289500 | |
| | 4500000 | 4500000 |

மேலதிகத் தகவல்கள்:

1. 31.12.2008 இல் இருப்புக்கள் – ரூபா. 200000
2. 31.12.2008 இல் சென்மதியாவுள்ள செலவுகள்: மின்சாரம் - ரூபா. 10000

   வாடகை வரி - ரூபா. 15000

3. முற்பணமாகச் செலுத்திய விளம்பரம் - ரூபா. 40000

4. கடன்பட்டோரிலிருந்து ரூபா. 15,000 அறவிடமுடியாக்கடனாகப் பதிவழிப்பு செய்யப்ப வேண்டும். மிகுதிக்கடன்பட்டோரில் 5% ஐயக்கடனுக்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

5. நிலையான சொத்துக்கள் மீதி பின்வருமாறு பெறுமானத்தேய்வுக்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்:

காணி கட்டடம் - ஆண்டுக்கு 5% கிரயத்தில்

தளபாடம் பொருத்திகள் - ஆண்டுக்கு 15% கிரயத்தில்

மோட்டார் வாகனம் - ஆண்டுக்கு 10% குறைந்து செல் மீதியில்

**வேண்டப்படுவது :**

திரு.அமலன் என்னும் தனிவியாபாரியின் 31.12.2008 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வியாபார, இ நட்டக்கணக்கையும் அத்திகதியில் உள்ளவாறான ஐந்தொகையையும் தயாரிக்குக.
(செய்கைகளைத் தெளிவாகக் காட்டுக.)

**(40** புள்ளி

**2.** ஒரு தனிவியாபாரியாகிய திரு.சிறி அவரது கணக்கேடுகளை முறையாகப் பேணவில்லை. ஆயி 31.12.2008 இல் முடிவுற்ற அவரது நிதியாண்டிற்கான பின்வரும் நிதித் தகவல்களை வழா கூடியவராகவுள்ளார்.

i. ஆண்டிற்கான கொடுக்கல் வாங்கல்களின் சுருக்கம்

| கொடுக்கல் வாங்கல் | ரூபா. |
|---|---|
| காசு விற்பனைகள் | 180000 |
| காசுக் கொள்வனவுகள் | 140000 |
| கடன்பெற்றோரிடமிருந்து பெற்ற காசு | 800000 |
| கடன்கொடுத்தோருக்கு செலுத்தியது | 640000 |
| வாடகை செலுத்தியது | 30000 |
| சம்பளம் செலுத்தியது | 40000 |
| சில்லறைச் செலவுகள் செலுத்தியது | 10000 |

ii. மீதிகள்

| மீதிகள் | 01.01.2008 | 31.12.2008 |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |
| காசு மீதி | 8000 | 15000 |
| இருப்புக்கள் | 90000 | 80000 |
| கடன்பட்டோர் | 55000 | 65000 |
| கடன்கொடுத்தோர் | 40000 | 30000 |
| வாடகை சென்மதி | 8000 | 10000 |
| தளபாடம் | 150000 | 140000 |
| உபகரணம் | 50000 | 45000 |

iii. ஆண்டுகாலத்தில் திரு. சிறி வியாபாரத்தில் இருந்து அவரது தனிப்பட்ட பயன்பாட்டிற்காக காசினை புற்றியிருந்தார். அப்பற்றுக்கள் பற்றி எதுவித பதிவுகளையும் அவர் பேணவில்லை.

iv. தளபாடத்திற்கும் உபகரணத்திற்கும் முறையே ரூ.10000 வும் ரூ.5000 வும் பெறுமானத்தேய்வுக்கான ஏற்பாடாகும்.

LIBRARY
04 DEC 2009
Eastern University, Sri Lanka

வேண்டப்படுவது:

பின்வருவனவற்றைத் தயாரிக்குக.

i. 01.01.2008 இல் உள்ளவாறான ஐந்தொகை
ii. 31.12.2008 இல் முடிவுற்ற ஆண்டிற்கான காசேடு
iii. 31.12.2008 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வியாபார இலாப நட்டக்கணக்கு
iv. 31.12.2008 இல் உள்ளவாறான ஐந்தொகை
(செய்கைகளைத் தெளிவாகக் காட்டுக)

(30 புள்ளிகள்)

கண்ணன் என்னும் வியாபாரியின் 31.12.2008 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி இணங்கவில்லை. வித்தியாசம் தொங்கல் கணக்கு ஒன்றில் இடப்பட்டு பரீட்சை மீதி இணங்கச்செய்யப்பட்ட பின்னர் ஏடுகளைப் பரிசோதித்த போது பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

(i) விற்பனை நாளேடு ரூ.10000 ஆல் குறைத்துக் கூட்டப்பட்டிருந்தது.
(ii) காந்தனுக்கு விற்பனை ரூ.15000 அவரது கணக்கில் தவறுதலாக ரூ.5000 என வரவு வைக்கப்பட்டிருந்தது.
(iii) கொள்வனவு நாளேடு ரூ.10000 ஆல் குறைத்துக் கூட்டப்பட்டிருந்தது.
(iv) பெற்றகழிவு ரூ.3200 கொடுத்தகழிவுக் கணக்கில் ரூ.2300 என வரவில் பதியப்பட்டிருந்தது.
(v) மோட்டார் வாகன விற்பனை ரூ.10000 விற்பனைக் கணக்கில் தவறுதலாக செலவு வைக்கப்பட்டிருந்தது.
(vi) செலுத்திய வாடகை ரூ.5400 அக்கணக்கில் பிழையாக ரூ.4500 என பதியப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது:

(a) மேற்கூறிய வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகளைத் தருக
(b) தொங்கல் கணக்கினை தயாரிக்குக.

(10 புள்ளிகள்)

4. பிள்ளைகள் பராமரிப்பு நிலையம் ஒன்றின் நிதித்தரவுகள் பின்வருமாறு:

31.12.2008 இல் முடிவுற்ற ஆண்டுக்கான கொள்ளல், கொடுத்தல் கணக்கு.

| கொள்ளல்கள் | ரூபா. | ரூபா. |
|---|---|---|
| ஆரம்ப காசு மீதி | | 30000 |
| சந்தா | | 300000 |
| நன்கொடைகள் | | 170000 |
| | | **500000** |
| **கொடுத்தல்கள்** | | |
| பயிற்சிச் செலவுகள் | | 100000 |
| பிள்ளைகள் பராமரிப்புச் செலவுகள் | | 120000 |
| சம்பளங்கள் | | 75000 |
| நிர்வாக செலவுகள் | | 80000 |
| இறுதி காசு மீதி | | 125000 |
| | | **500000** |

**மேலதிகத் தகவல்கள்:**

| மீதிகள் | 31.12.2007 | 31.12.2008 |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |
| சந்தா வருமதி | 10000 | 25000 |
| முற்பண சந்தா | 5000 | 10000 |
| நிர்வாக செலவுகள் சென்மதி | 6000 | 5000 |
| உபகரணங்கள் (புத்தகப் பெறுமதி) | 100000 | 75000 |

**வேண்டப்படுவது:**

பின்வருவனவற்றைத் தயாரிக்குக:

i. 31.12.2008 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானச் செலவுக் கணக்கு.

ii. 01.01.2008 இலும் 31.12.2008 இலும் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள். (செய்கைகளைத் தெளிவாகக் காட்டுக)

(20 புள்ளிக